Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -01 | 17-07-2003 | வியாழக்கிழமை | ஓசை 149




## இடைக்கால நிர்வாக நகல் வரைபுடன் வெஸ்பேர்க் இன்று வன்னி வருகிறார்

இலங்கைக்கான நோர்வேயின் சமாதான சிறப்புத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் இன்று கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளார்.

சிறிலங்கா அரசால் புதிதாக வரையப்பட்ட இடைக் கால நிர்வாக சபை தொடர்பான நகல் வரைபுடன் இன்று காலை பத்து மணிக்கு கிளி வரும் வெஸ்பேர்க் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பு - யாழ். இந்திடையில் படையினரை ஏற்றி இறக்கும் பணியில் உலங்குவானூர்திகள்

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையிலான சிறிலங்கா படையினரை ஏற்றி இறக்கும் பணியில் உலங்கு வானூர்திகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இந்தப் பணியில் ஈடுபட்டு வந்த விமானங்கள் பழுதடைந்த நிலையில் விமானங்களுக்கு பற்றாக்

(08ஆம் பக்கம் பார்க்க)

# கடற் பிராந்தியத்தில் நிலவும் சர்ச்சைகள் குறித்து

# முல்லையில் ரெலவ்சன்-கேணல் சூசை பேச்சு!

## கடற்படையினரின் மீனவர் மீதான கெடுபிடிகள் குறித்தும் ஆராய்வு

(அலுவலக செய்தியாளர்)

**கடற்பிராந்தியத்தில் இடம்பெறும் யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் அதனால் எழும் சச்சரவுகள், முரண்பாடுகள் மற்றும் மீனவர்கள் மீது சிறிலங்காக் கடற்படை மேற்கொள்ளும் தாக்குதல்கள் என்பன தொடர்பாக நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ரெலவ்சனுக்கும் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்களுக்குமிடையில் முல்லைத்தீவில் இடம்பெற்ற சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.**

கடற்புலிகளின் சந்திப்பு மண்டபத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் தொடர்ச்சியாக சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்டுவரும் அத்துமீறல் தொடர்பாகவும் அண்மைக் காலத்தில்கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் வணிகக்கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது தொடர்பாகவும் கடற்புலிகளின் கடற்பயிற்சிகள்மற்றும் கடல் நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் கடலில் மக்கள் தொழிலில் ஈடுபடும்போது கடற்படையினரின் அடாவடித்தனம் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை சமாதானச் செயலகப் பணிப்பாளர், கடற்புலிகளின் தளபதிகள் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

நேற்றுக் காலை 9.40 மணி முதல் 11.45 மணிவரையும் இச்சந்திப்பு இடம்பெற்றது.



## புலிகளின் போர்க்கலன்களை ரெலவ்சன் பார்வையிட்டார்!

### கடற்பரப்பிலும் பயணிப்பு

(அலுவலக செய்தியாளர்)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன் தலைமையிலான குழுவினர் நேற்று கடற்புலிகளின் ஒரு தொகுதி போர்க்கலன்களைப் பார்வையிட்டதோடு அவற்றில் சுமார் 45 நிமிட கடல் பயணம் ஒன்றையும் மேற்கொண்டனர்.

கடற்கரையில் இருந்து கடற்புலிகளின் சிறிய படகுகள் மூலம் கடலில் நிறுத்தப்பட்டிருந்த புலிகளின் போர்க்கலன்களில் ஏறிய இவர்கள் கடற்புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் கடற்புலிகளின் தளபதிகளுடன் கண்காணிப்புக் குழுவினருடன் இந்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு உடன்பாட்டை கடற்படை ஆரம்பம் முதல் மோசமாக மீறி வருகின்றது!

### கண்காணிப்புக் குழுத்தலைவரிடம் கேணல் சூசை வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது முதல் இன்றுவரை சிறிலங்காக் கடற்படை கடலில் அவ் ஒப்பந்தத்துக்கு அமைய நடந்துகொள்ளவில்லை என கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரிடம் வலியுறுத்தியுள்ளார். நேற்று கடற்புலிகளின் தளபதிக்கும், கேணல் சூசைக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும் இடையிலான சந்திப்பின் போதே, இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

அண்மையில் விடுதலைப்புலிகளின் வணிகக் கப்பல் தாக்கப்பட்டமை, அதன்போது 12 போராளிகள் உயிரிழந்தமை மற்றும் விடுதலைப் புலிகளின் கடற்பயிற்சியின் போது சிறிலங்காக் கடற்படையினர் நடந்துகொண்ட விதம் என்பன அப்பட்டமான அத்துமீறல்களாகும் எனத் தெரிவித்த அவர் இது தொடர்பாக போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் விரிவாக எடுத்துக் கூறியதாகவும் அதனை அவர் ஏற்றுக்கொண்டு அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.கரையோர மீனவர்கள் மீது படையினர் கெடுபிடி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை, பாசையூர், குருநகர் போன்ற இடங்களில் வசிக்கும் கடற்றொழிலாளர்கள் மீது கடற்படையினரின் எச்சரிக்கைகள் மீண்டும் அதிகரித்து வருவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்குச் செல்லும்போது படையினரால் குறிக்கப்படும் நிறங்களை உடைய பாய்களைப் பொருத்த வேண்டும் என்றும் இதனை மீறுவோர் மீது கடற்றொழிலுக்குச் செல்வதற்கு கடற்படையினரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்படும் என்று எச்சரித்துள்ளனர்.

இதன்படி கொழும்புத்துறை மீனவர்கள் சிவப்பு நிற பாயையும், பாசையூர் மீனவர்கள் நீலநிறப் பாயையும், குருநகர் மீனவர்கள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்தசங்கரியின் கூற்றுக்கு திருமலை. கூட்டணிக்கிளை கண்டனம்

(திருகோணமலை)

ஆணையிறவுப் படைத்தளம் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி வெளியிட்ட கூற்றை அக்கூட்டணியின் திருமலை மாவட்டக்கிளை செ. சிறிஸ்கந்தராசா கண்டன அறிக்கை ஒன்றின் மூலம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் தற்பொழுது திருகோணமலையில் அரச படையினரால் நடத்தப்படும் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு பெரும் அசௌகரியத்தையும் அவமானத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வகையான தேடுதல் மற்றும் சுற்றிவளைப்புக்களுக்குச் சட்ட அங்கீகாரம் இல்லாத அதேவேளையில் தமிழ்மக்களது அடிப்படை மனித உரிமைகளை மிகவும் மோசமாக மீறுவதாகவும் உள்ளது. இவ்விதமான நடவடிக்கைகள் தொடருமா

(08ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சை முகாம்

முல்லை. மாவட்ட வைத்தியசாலைக்கு வவுனியா பொதுவைத்திய சாலையில் இருந்து, நாளை மறுதினம் காலை 10.00 மணிக்கு வைத்திய கலாநிதிகளான ஆர். சுதர்சன், விவைசுபாரட்ணம் ஆகியோர் வருகை தந்து நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க இருக்கின்றனர். இங்கு சிகிச்சை பெறவிரும்புவோர் அன்றைய தினம் காலை வருகை தந்து சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுமாறு முல்லை. மாவட்ட வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

## கொழும்பு மாநகர சபை உறுப்பினருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

கொழும்பு மாநாகர சபை உறுப்பினர் ரோய் நிஷாந்த என்பவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் யுவதி ஒருவரை தனது மனைவி எனக்கூறி சுவிற்சர்லாந்திற்கு கடத்த முற்பட்ட வேளை குடிவரவு அதிகாரிகளால் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனது மனைவியின் கடவுச்சீட்டிலுள்ள புகைப்படத்தை மாற்றி குறிப்பிட்ட தமிழ் யுவதியின் புகைப்படத்தை ஒட்டி கடந்த 27ஆம் திகதி கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து சுவிற்சர்லாந்திற்குப் பயணத்தை மேற்கொண்ட போது டுபாயில் விமானம் சில மணிநேரம் தரித்து

(08ஆம் பக்கம் பார்க்க)

# துயர் பகிர்வோம்

அமரர்

## திரு.ப.செல்லையா

எமது காரியாலய சாரதி திரு. செ.கணேசமூர்த்தி அவர்களின் அன்புத் தந்தையார் திரு.ப.செல்லையா அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளை, அன்னாரின் 31ஆம் நாள் நினைவில் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்தனை செய்கின்றோம்.

அலுவலர்,
நலன்புரிச்சங்கம்,
கச்சேரி, முல்லைத்தீவு.

(சி-8427)

# விழிநீரை காணிக்கையாக்குகின்றோம்

## அமரர்- சின்னப்பிள்ளை ஆறுமுகம்

**(உதவிக் கல்விப்பணிப்பாளர் (முன்பள்ளி முல்லைத்தீவு)**

சக உதவிக்கல்விப்பணிப்பாளர் அமரர் சின்னப் பிள்ளை ஆறுமுகம் அவர்களின் அகால மரணச்செய்தியைச் செவியுற்று ஆழ்ந்த மன வேதனைக்குள்ளாகிறோம்.

ஆழ்ந்த துயரில் மூழ்கியிருக்கும்:-

வலயக்கல்விப்பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
நல்லுறவுச்சங்கம்,
முல்லைத்தீவு.

(சி-7762)

# கெயார் சர்வதேசம்-இலங்கை

## சமூக அணி திரள்தல்/பான்மை அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்

## ஆட்சேர்ப்பு

(01. வெற்றிடம் - கொழும்பு)

ஆற்றலும் கடின உழைப்பும் கொண்ட இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி:** சமூக அணிதிரள்தல்/பான்மை அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்

**02. கல்வித்தகைமைகள்:** அடிப்படை சமூக விஞ்ஞானம் பட்டப்படிப்பு/டிப்ளோமா

**03.முன்னனுபவம்:** தொடர்புடைய துறையில் மூன்று வருட அனுபவம்.

**04. சம்பளம்:** தகைமைக்கு அமைவாக கெயாரின் வழமையான நன்மைகளையும் கொண்டிருக்கும்.

**05. நியமனம்:** புதுப்பிக்கக்கூடிய ஒப்பந்த அடிப்படை

**06. களவேலை:** யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முழங்காவில் கெயார் அலுவலகங்களில் உள்ள சமூக அணிதிரள்தல்/பான்மை அபிவிருத்தி பயிற்சி உதவியாளர்களை வழிநடத்துதல்/நெறிப்படுத்துதல்.

தகுதியுடையோர் சுயவிபரக்கோவையை உறவினரல்லாத இரு மத்தியஸ்தர் பெயர்களுடன்.

**Director Human Resources, care International-sri Lanka**
No. 7A, Gregorys Road, Colombo - 7
e-Mail: hr@ care.lk

என்ற முகவரிக்கு 25.07.2003ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், புதுக்குடியிருப்பு, முழங்காவிலில் உள்ள கெயார் அலுவலகங்களில் கையளிக்கப்படலாம்.

பணிப்பாளர்-மனிதவள அபிவிருத்தி
கெயார் சர்வதேசம்,
இலங்கை.

(சி-8425)

# வரி விளம்பரம்

## வெளிவந்து விற்பனையாகிறது Learn Vocabulary

புதிதாக ஆங்கிலம் பயிலும் மாணவர்களின் சொல்லறிவை விருத்தி செய்யும் ஆங்கில நூல் யாழ், வன்னி அனைத்துப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கிறது. (3449)

## Amal Dentel Works

இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு என்ற முகவரியில் இருந்த அமல் பல்கட்டும் நிலையம் பரந்தன் வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இங்கே பல் கட்டுதல், பல் கிளிப் போடுதல் என்பவற்றினை உடன் செய்து கொள்ளலாம். (3458)

## முன்பள்ளி விளையாட்டு விழா

வட்டக்கச்சி சில்வா வீதிப் பகுதியில் அமைந்துள்ள கரைச்சிப் பிரதேச சபையின் தூயமணி முன்பள்ளிப் பாடசாலை விளையாட்டு விழா கடந்த 14ஆம் திகதி நடைபெற்றுள்ளது. இந்த விழாவில் வரவேற்புரை, ஆசியுரை, ஒலிம்பிக் தீப மேற்றல், சத்தியப்பிரமாணம், "அசைவும் இசையும்" போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

* * *

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவன ஒழுங்கு அமைப்பில் கண்டாவளை அபிவிருத்தி நிறுவனத்தால் நடாத்தப்படும் "சரவணன்" முன் பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா நாளை பரந்தன் பொது விளையாட்டு மைதானத்தில் பி.ப 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (12.14)

## முயல் திருட்டு

(கிளிநொச்சி)

திருநகர் வீடொன்றில் கூட்டில் அடைக்கப்பட்டிருந்த நான்கு முயல்கள் களவாடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

## அமைச்சர் மட்டு விஜயம்

வர்த்தக, நுகர்வோர்பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்க இன்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராராஜசிங்கத்தின் அழைப்பை ஏற்றே இவர் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கல்விச் சுற்றுலா

தருமபுரம் சவேரியார் இளைஞர் உருவாக்கல் இயக்க ஆதரவுடன் விசுவமடு குமாரசாமிபுரம் பாடசாலையில் இடம்பெற்றுவரும் அடிப்படைக் கல்வியூட்டல் வகுப்பு மாணவர்களுக்கான ஒரு நாள் கல்விப் பயணச் சுற்றுலா எதிர்வரும் 19-07-2003 அன்று தருமபுரம் பங்குத் தந்தை யூட்நிக்சன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

(3551) அ.யூட்நிக்சன்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பட்டப்பின் படிப்புகள் பீடம்

**பட்டப்பின் கல்வித் தகைமை (யாழ்ப்பாணம், வவுனியா வளாகம்) பகுதி நேரம் I, பகுதி நேரம் II, முழுநேரம் – இரண்டாம் பருவத் தேர்வு**

மேற்படி தேர்வுகள் 2003-08-18 அன்று யாழ். பல்கலைக் கழகத்திலும் (பகுதி நேரம் I, பகுதி நேரம் II, முழு நேரம்) வவுனியா வளாகத்திலும் (பகுதி நேரம்I) நடைபெறவுள்ளன.

மேற்படி தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களைப் பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீடத்திலும் வவுனியா வளாகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரிகள் பாட அலகு ஒவ்வொன்றிற்கும் ரூபா 100/= வீதமும் பகுதி நேரம் II, முழுநேர விண்ணப்பதாரிகள், ஆய்வுக்கட்டுரைக்கான கட்டணமாக ரூபா 500/= உம் கற்பித்தல் பயிற்சிச் கட்டணமாக ரூபா 500/= உம் யாழ். பல்கலைக் கழக மக்கள் வங்கிக்கிளை அல்லது யாழ். பல்கலைக்கழக நிதிக்கிளையில் பணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டுடன் விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2003.08.05 அன்று அல்லது அதற்கு முன்பாக பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பதிவாளர்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

16.07.2003 (சி-8232)

# கண்ணீர் அஞ்சலி

## செல்வி-த.சுபத்திரா

(பட்டதாரி)

எமது பாடசாலையில் சேவையாற்றிக்கொண்டிருந்த சிரேஷ்ட ஆசிரியை செல்வி த. சுபத்திரா (பட்டதாரி) 13.07.2003 அன்று இறைவனடி சேர்ந்துள்ளமையை அறிந்துள்ளோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், கவலையும் தெரிவிப்பதோடு அன்னார் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா.அ.சங்கம், மு/சுதந்திரபுரம் அ.த.க.பா.

(3455)

# 03 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
15 - 04 - 1980



தாயக மண்ணில்
17 - 07 - 2000

## லெப். மாதவி

(யுவாணிஸ் முருயிஸ் யூலியற்)

செல்வச் சிரிப்பேந்திய செல்வியே
மா தலைவன் அடிபொருந்திய மாதவியானாய்
மறைந்தாய் நீ மாநாட விடுதலைக்காய்
வாழ்வாய் எம் இதயங்களில் நினைவாய்
வந்து பிறந்திடாயோ வாசமலரே
வாஞ்சையுடன் எம்மை வந்து அணைப்பாயோ.

குடும்பத்தினர்

(3552)

# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள், பிற தகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் 2003-07-25 ஆம் நாள் நேரில் வருகை தரவும்.

**பணிநிலை** ● எழுதுநர்

**கல்வித்தகைமை :-** க.பொ.த.(உ/த) வணிகப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

நடுவப்பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

(சி-8426)

# ஈராக்கின் பேரழிவு ஆயுதங்கள் குறித்து ஆறு மாதத்தில் தகவல் தர முடியுமாம்!

## அமெரிக்க ஆயுத பரிசோதனைக் குழு தெரிவிப்பு

**அடுத்த ஆறு மாத காலத்தினுள் ஈராக்கில் பாரிய அழிவைத் தரும் ஆயுதங்கள் இருந்தன என்பதற்கான ஆதாரங்களைத் திரட்ட முடியுமென அமெரிக்காவின் ஆயுத பரிசோதனைக் குழு தெரிவித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் ஆயுத சோதனை அதிகாரி செய்தி ஸ்தாபனத்திற்கு அளித்த பேட்டியில் பாரிய அழி வைத்தரும் ஆயுதங்கள் தொடர்பாக அமெரிக்க இராணுவம் பெருமளவு தகவல்களைத் திரட்டியுள்ளது எனவும், இவை முற்றிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் சதாம் பாரிய அழி வைத்தரும் ஆயுதங்களை வைத்திருந்தார் என்பது நிரூபிக்கப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஈராக்கில் சதாம் ஹுசைன் மறைத்து வைத்திருந்ததாகக் கருதப்பட்ட பேரழிவு ஆயுதங்கள் இதுவரை முழுமையாகக் கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.


இந்நிலையில் பிரித்தானிய அரசு அமெரிக்க புலன் விசாரணை அமைப்போடு முரண்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

பிரிட்டனும் அமெரிக்காவும் கூட்டாக ஈராக்கைத் தாக்கிய போது அணு மற்றும் இரசாயன ஆயுதங்களைக் கண்டறிவதற்கான போராக அந்தப் போர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது போரின் இலக்கு ஐயத்துக்குரியதாக மாறியிருப்பதாகப் பலர் கருதுகின்றனர்.

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இப்பிரச்சினைகளைத் தீர்க்கும் முயற்சியில் அவசரமாக ஈடுபட்டிருக்கின்றார்.

இந்தச் சந்தேகம் தீர்க்கப்படாது விட்டால் அமெரிக்காவில் சனாதிபதியின் செல்வாக்கு வீழ்ச்சியடையும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.



சீனாவின் சிங்குவான் மாநிலத்தின் தென் மேற்கு டண்டா நகரத்தில் ஏற்பட்ட மண்சரிவில் பரா இராணுவப் பொலிசார் இரண்டு மாடிக்கட்ட இடிபாடுகளுக்கிடையில் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

# சீனாவில் மண்சரிவினால் 57 பேர் புதையுண்டு மரணம்!

(பீஜிங்)

சீனாவில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 57 பேர் உயிரிழந்துள்ளதாக அஞ்சப்படு கின்றது.

மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெறுகின்றது. சீனாவில் பெரும்பாலான பகுதிகளில் பருவ மழை பெய்து வருவதால் பல இடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

கூவே மாகாணத்தில் பெய்து வரும் பலத்த மழையின் காரணமாகப் பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கியவர்களில் 51 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

மீட்புக் குழுவின் மிகத் துரிதமாக 71 பேரை மீட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் மீட்புப் பணிகள் தொடர்கின்றன.

இந்த ஆண்டில் மட்டும் சீனாவில் மழை வெள்ளம், மண் சரிவு என்பவற்றினால் இதுவரை 550 பேருக்கு அதிகமாக உயிரிழந்துள்ளனர்.

சுமார் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் தமது வீடுகளை இழந்து இடம் பெயர்ந்து வாழ்கின்றனர் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

# உறவில் முன்னேற்றம் காண இந்தியா—பாகிஸ்தான் முயற்சி!

பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதராகச் சிவசங்கர் மேனன் நேற்றுப் பதவியேற்றுள்ளார். இரு நாடுகளிடையே நட்புறவை வலுப்படுத்த அவர் உறுதியும் பூண்டுள்ளார்.

சிவசங்கர் மேனன் நேற்று முன்தினம் இஸ்லாமாபாத் போய்ச் சேர்ந்துள்ளார். அவர் முறைப்படி நேற்றுப் பதவியேற்றுக் கொண்டுள்ள நிலையில்,

இரு நாடுகளுக்கிடையேயான உறவை வலுப்படுத்துவதே தமது நோக்கம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே பாகிஸ்தானுக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு திரும்பியுள்ள பாடசாலை மாணவர்கள் இரு நாடுகளுக்கிடையேயும் உறவு மீண்டும் வலுப்பெற வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவற்றுக்கு மத்தியில் பாகிஸ்தான் சிறையில் 269 இந்திய மீனவர்களை இந்நாட்டு அரசு நல்லெண்ண நடவடிக்கையாக நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளது.

# ஹெரோயின் வைத்திருந்த இல.தமிழருக்கு 10 ஆண்டு சிறை!

(சென்னை)

ஹெரோயின் வைத்திருந்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் இலங்கையைச் சேர்ந்த ஸ்ரீதேவனன் ஸ்ரீக்கு 10 ஆண்டுகள் சிறைத தண்டனையும் ரூபா ஒரு இலட்சம அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் தடுப்பு வழக்குகளை விசாரிக்கும் முதன்மை செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதி இவ்வாறு தீர்ப்பளித்துள்ளார்.

சென்னை, குளத்தூரில் உள்ள ராகு நகரில் வசித்து வந்தார் ஸ்ரீதேவன் 1996 ஆம் ஆண்டு இவா கடத்துவதற்காக வைத்திருந்த 430 கிராம் ஹெரோயினைப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸா பறிமுதல் செய்து அவரைக் கைது செய்தனர்.

# தாய் விமானத்தினுள் நடந்த கத்திக்குத்தில் ஒருவர் காயம்

தாய்லாந்து விமானம் ஒன்று சிட்னி விமான நிலையத்தில் தரையிறங்கிய சமயம் இரு பயணிகளுக்கிடையே கத்திக் குத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவில் வாழும் தாய்லாந்துப் பிரஜை ஒருவரே கத்திக் குத்துக்கு இலக்கானதாக விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளார். தாய்-எயர்வே விமானம் சிட்னியில் தரையிறங்கிய சமயம் இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக 22 வயதுடைய சிட்சி நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏனைய பயணிகள் தகவல் தருகையில், விமானம் தரையிறங்கத் தயாரான சமயம் இந்தக் கத்திக் குத்துச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறியுள்ளனர்.

இதற்கான காரணங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. காயமடைந்தவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மே மாதத்தில் இத்தகைய 02 சம்பவங்கள் ஏற்கனவே இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# ஈராக் குறித்த புஷ்சின் நிலைப்பாட்டிற்கு சனநாயகக் கட்சி கண்டனம்

(வாஷிங்டன்)

ஈராக் போருக்கு அதிக பணம் செலவாவதையும் மற்றும் ஈராக்கின மறு சீரமைப்பிற்கு சர்வதேச உதவியை நாடாமல் இருப்ப தற்கும ஜனநாயக் கட்சியைச் சேர்ந்த அமெரிக்க செனட் உறுப்பினர்கள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் புஷ்ஷை குறை கூறியுள்ளார்கள்.

அமெரிக்க அரசின் நிதிப் பற்றாக்குறை இந்த ஆண்டு 45500 கோடி டொலரை எட்டும் என்றும் இந்தப் பற்றாக்குறை க்கு அடுத்த ஆண்டு 47500 கோடி டொலர் வரை இருக்கக் கூடும் எனும் அறிவிப்பைத் தொடர்ந்து அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்கள்.

ஐ.நா.சபை, வட அத்திலாண்டிக் ஒப்பந்த நாடுகள் மற்றும் விரிவான உலக சமுதாயத்தை ஈராக்கின் மறு சீரமைப்பில் ஈடுபடுத்த வேண்டும் என்று ஜனநாயகக் கட்சியின் பழம் பெரும் தலைவா சனட்டர் எட்வேகெனடி புஷ் நிர்வாகத்தை கேட்டுக் கொண்டுள்ளார்.

போருக்குப் பிந்திய அமெரிக் கக் கொள்கை அடிப்படை யில்லாமல் இருப்பதாகவும் இதை ஈராக் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி அமெரிக்கத் துருப்புக்களை ஆபத்துக்குள்ளாக்கி இருக்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

# பொடோவிலிருந்து விடுவிக்கக் கோரிய ம.தி.மு.க வினரின் மனு தள்ளுபடி!

பொடோ வழக்கிலிருந்து விடுவிக்கக் கோரி ம.தி.மு.க வினர் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என பூந்தமல்லி பணி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியமைக்காக பொடோ சட்டத்தில் தொடரப்பட்ட வழக்கிலிருந்து விடுதலை செய்யக் கோரி வை.கோ தவிர ஏனைய ம.தி.மு.க.வினர் 08 பேர் தாக்கல் செய்த மனுக்களை பூந்தமல்லி பொடோ நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

கடந்த வருடம் யூன் மாதம் பொதுக் கூட்டம் ஒன்றில் விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதாக வை.கோ, கணேசமூர்த்தி, புலவர் சிவந்தியப்பன், கணேசன், வீரஇளவரசன், பூமிநாதன் உள்ளிட்ட 09 ம.தி.மு.க.வினர் பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். இது பற்றிய வழக்கு விசாரணை பூந்தமல்லி பொடோ நீதி மன்றத்தில் நடைபெற்று வரு கின்றது.

இந்த வழக்கிலிருந்து விடுவிக்கக் கோரி வை.கோ தவிர ஏனைய 08 ம.தி.மு.க. வினரும் மனுதாக்கல் செய்தனர். அம் மனுக்கள் மீதான விசாரணை முடிவடைந்ததை யடுத்து நேற்று முன்தினம் தீர்ப்பளிக்கப்பட்டது. இதற்காக நேற்று முன்தினம் வை.கோ உள்ளிட்ட 09 பேரும் பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

பின்னர் தீர்ப்பளித்த நீதிபதி ராஜேந்திரன், பொடோ வழக்கிலிருந்து ம.தி.மு.க.வினர் 08 பேரையும் விடுவிக்க முடியாது என்று கூறி, அவர்கள் தாக்கல் செய்த மனுக்களைத் தள்ளுபடி செய்துள்ளார். இதைத் தொடர்ந்து வழக்கு விசாரணையை வரும் 25ஆம் திகதிக்குத் தள்ளி வைத்துள்ளார்.

# இந்தியாவின் மிக்.21 ரக விமானம் வீழ்ந்து நொருங்கியது!

## இரு விமான ஓட்டிகள் பலி

(டில்லி)

காஷ்மீர் மாநிலத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த மிக்-21 ரகப் போர் விமானம் விழ்ந்து நொருங்கியதில் அதிலிருந்த 02 பேர் உயிரிழந்துள்ளனர்.

மிக் ரகப் போர் விமானங்கள் பயிற்சியின் போது விபத்துக்குள்ளாவது தொடர்கதையாகவுள்ளது.

அந்த வகையில் நேற்று முன்தினம் இரவு காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகர் அருகே பயிற்சியில் ஈடுபட்டிருந்த மிக்-21 ரக விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் திடீரெனக் கீழே வீழ்ந்து நொருங்கியுள்ளது.

இதில் விமானத்தைச் செலுத்திய விமானி ரஸ் சோட்டி, துணை விமானி கணேஸ் ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# விமானத்தில் வெடிகுண்டுடன் ஏற முயன்றவர் கைது

புதுடில்லியிலிருந்து சண்டி நகருக்குச் செல்லவிருந்த விமானத்தில் வெடிகுண்டுகளுடன் ஏற முயன்ற முகம்மது சித்திஜிகி என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். தமிழ் நாட்டைச் சேர்ந்த இவரிடம் பொலிசார் புலன் விசாரணையினை மேற்கொண்டுள்ளனர்.

## - வடகொரிய அணுசக்தி விவகாரம்-

# அமெ-சீன வெளியுறவு அமைச்சர்கள் தொலைபேசி மூலம் உரையாடல்!

வடகொரியாவின் அணுசக்தி விவகாரம் தொடர்பாகச் சீன, அமெரிக்க வெளியுறவு அமைச்சர்கள் தொலைபேசி மூலம் கலந்துரையாடியுள்ளார்கள்.

சீன வெளியுறவு அமைச்சர் ரிஸ்வோ சிங்கும், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவலும் நேற்றுக் காலை தொலைபேசி மூலம் உரையாடுகையில்,

இந்த விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்குச் சீனா மேற்கொள்ளும் முயற்சியின் ஒரு நடவடிக்கை இதுவாகும் எனக் கருதப்படுகின்றது.

பேச்சுவார்த்தையின் பின்னர் இரு அமைச்சர்களும் கருத்துக் கூறுகையில். சீன அமெரிக்க உறவுகள் தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாகத் தெரிவித்தனர்.

பீஜிங்கில் சீன, அமெரிக்க, வடகொரியப் பேச்சுவார்த்தை அண்மையில் இடம்பெற்ற போதும கணிசமான பெறுபேறுகள் எதுவும இதுவரை பெற்றுக் கொள்ளப்படவில்லை.

இருந்த போதிலும் அமெரிக்காவையும் வடகொரியாவையும் பேச்சுவார்த்தையில் சம்பந்தப்படுத்தச் சீனா தொடர்ந்தும் முயற்சி மேற்கொள்ளும் என்று இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுவார்த்தைகள இடம்பெற வேண்டும் என வடகொரியா வற்புறுத்தியுள்ள போதிலும் இத்தகைய கலந்துரையாடல்களில் ஜப்பானும், தென்கொரியாவும் பங்குபற்ற வேண்டுமென்று அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையில் ஜப்பானியத் தினசரிப் பத்திரிகையில் நேற்று வெளியான செய்தியில் வடகொரிய சனாதிபதி ஹிம்யோங்கில் அரசாங்கத்திற்குரிய மதிப்பை அமெரிக்கா வழங்குமானால் பல்தேசியப் பேச்சுவார்த்தையில பங்குபற்ற முடியுமென்று வடகொரியா அறிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. அதே சமயத்தில் சீனா, யப்பான், தென்கொரியா, வடகொரியா, அமெரிக்கா ஆகிய 05 நாடுகள் பங்கு பற்றும் கலந்துரையாடல் நடைபெற வேண்டும் என்று யப்பான் வலியுறுத்தியுள்ளது.



# அமெரிக்காவின் குறியில் ஈரான் தப்புமா...?




கத்தாமி

ஈரான் மீதான அமெரிக்காவின் பார்வையின் விபரீத விளைவுகள் என்ன... ஈரான் அமெரிக்காவின் தாக்குதலுக்கு உள்ளாகுமா... என்பதே இன்று உலகம் முழுவதும் கேட்கப்படும் கேள்வியாகும்.
ஈராக் மீது எவ்வாறு குற்றங்களை வாஷிங்டன் சுமத்தியதோ அதே குற்றச்சாட்டுக்களை கொஞ்சம் மாற்றி மெருகூட்டி தற்போது ஈரான் மீது சுமத்தப்பட்டுள்ளது.

அதாவது ஈரான் அணுவாயுத பரவல் தடை ஒப்பந்தத்திலிருந்து மீறி அணுவாயுதத்தை உற்பத்தி செய்தல், அல்ஹைதா பயங்கர வாதிகளுக்கு ஊக்கமளித்தல், ஈராக் விடயத்தில் தேவையில்லாது மூக்கை நுழைத்தல், பயங்கரவாதத்தை அயல் நாடுகளில் பரப்பி வருதல்.. இவ்வாறு ஈரான் மீதான குற்றச்சாட்டுக்கள் நீண்டு செல்கின்றன.

அத்துடன், கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு, ஈரானில் பல்கலைக்கழக மாணவர்கள் ஜனநாயகம், சுதந்திரம் என்றும் சனாதிபதி கத்தாமி இதுவரை என்ன செய்தார்....? எனும் வினாவுடனும் ஆர்ப்பாட்டத்தில் குதித்திருந்தனர்.

இந்நிலை ஏற்கனவே பெரிய பெரிய குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ள வாஷிங்டனுக்கு மாணவர்களின் போராட்டம் பழம் நழுவி பாலில் விழுந்த கதையாயிற்று.



ஜோர்ஜ் புஷ்

பல்கலைக்கழகம் தனியார் மயப்படுத்தப்படுவதாக எதிர்த்து போராட்டம் நடத்தப்பட்ட போதும், வாஷிங்டனோ ஈரான் அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் என உலகத்தின் பார்வையை ஈரான் மீது திருப்புவதில் குறியாகவுள்ளது.

இதனால் தற்போதைய ஈரானோ பெரும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது எனலாம்.
ஏனெனில் இத்தகைய சிறிய ஆர்ப்பாட்டங்களை அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஈரான் சுதந்திரமடையும் நடவடிக்கையின் ஆரம்பமே இந்த ஆர்ப்பாட்டங்கள் என்றும் சுதந்திரத்தின் அழைப்பே இந்த ஆர்ப்பாட்டம் என்றும் மகிழ்ச்சித் துதி பாடியுள்ளார்.

இதேபோல், அமெரிக்க இராஜங்க செயலர் கொலின் பவல், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கண்டலெஸா றைஸ் ஆகியோரும் சனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் கருத்தையே ஆதரித்துள்ளனர்.

ஆனால் ஈரானின் மாணவர் ஆர்ப்பாட்டத்தை சுதந்திரப் போராட்டம் என வர்ணிக்கும் அமெரிக்கா, ஏனோ ஈராக்கில் மூலைக்கு மூலை அமெரிக்கப் படை ஈராக்கியர்களின் தாக்குதலுக்கு உள்ளாவதை எப்படி வர்ணிக்கப் போகின்றது... ஈராக்கியர்களின் சுதந்திர வேட்கை என்பதை ஒத்துக்கொள்ளுமா... என அவதானிகள் வினாவெழுப்பியுள்ளனர்.

ஈரானும் அமெரிக்காவும் 1976ஆம் ஆண்டு முதல் முரண்டுபட்டுக் கொண்டு தான் இருக்கின்றன.

1976இல் ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சியை அடுத்து அமெரிக்காவின் பிடியிலிருந்து ஈரான் தன்னை விடுவித்துக் கொண்டது.

அதனால் மீண்டும் ஈரானில் தான் எப்படி கால் பதிப்பது என்று, அன்று தொடங்கி இன்று வரை அமெரிக்கா தருணம் பார்த்திருக்கின்றது என்றால் மிகையாகாது.
அதற்கு ஏற்ற வகையில் ஈரான் மீதான குற்றச்சாட்டுக்களை விரிவுபடுத்திக் கொள்வதில் அமெரிக்கா... வெகு முனைப்பாக காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் சீனாவிடமிருந்துதான் ஈரான் அணு உலைகளைப் பெற்றுள்ளதாகவும், அதைத் தடைசெய்து அழிக்க வேண்டும் என்றும் அமெரிக்கா கோஷமிடுகின்றது.

ஆனால் உண்மை நிலையாதெனில் ஈரானில் அணுவாயுதம் தயாரிக்க இன்னும் 03 ஆண்டுகள் செல்லும் அதாவது ஈரான் அணுகுண்டு வைத்துள்ளது என்பதற்கு 03 ஆண்டுகள் காத்திருக்கவே வேண்டும் என நிபுணர்கள் கூறியுள்ளனர்.

வடகொரியா அணுகுண்டு வைத்திருப்பதாக பறைசாற்றியுள்ளது. ஆனால் எதிர்காலத்தில்தான் ஈரானிடம் அணுகுண்டு கையில் வரக்கூடும். எனவே வடகொரியாவை தட்டிக் கேட்காமல் ஈரானை அதட்டுவது முறையல்லவே என்று அவதானிகள் சினந்து கொள்கின்றனர்.

மறுபுறம், ஈராக்கில் இல்லாத அணுவாயுதம் இருப்பதாக பிடிவாதம் பிடித்த அமெரிக்கா, ஈரானிலும் பிடிவாதமாக இருப்பதைப் பார்த்தால்... இன்றைய ஈராக்கின் நிலை நாளை ஈரானுக்கு உருவாகாது என்பதில் என்ன நிச்சயத் தன்மையுண்டு என ஒரு சாரார் அச்சத்துடன் வினாவெழுப்பியுள்ளனர்.

ஏனெனில், ஈரானின் அண்மையில் சோவியத் ரஷ்யாவில் இருந்து பிரிந்த அஸர்பைஜான் எனுமிடத்தில் வாஷிங்டன் 15000 படைவீரர்களை தரையிறக்கவுள்ள தாக "வோல் ஸ்ரீட் ஜெர்னல்" பத்திரிகை கூறியுள்ளதுடன், இப்பகுதியில் இருப்பவர்களான அஸர்பைஜானிகள் பிரிவினை கோருபவர்களாக இருப்பதால் இவர்களுக்கு நிதி மற்றும் ஆயுத உதவிகளை அமெரிக்கா செய்வதாகவும் உண்மைகள் கசிய ஆரம்பித் துள்ளதாகவும் அவதானிகள் கூறுகின்றனர்.

அதுமட்டுமன்றி இது வரை ஈரானின் ஒத்துழைப்புத் திருப்திகரமாக இருப்பதாகக் கூறிவந்த சர்வதேச அணுசக்தி ஆய்வாளர்கள், தற்போது ஈரான் அணுவாயுத உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டு நடக்கத் தவறி விட்டதாகப் புதியதான குற்றச்சாட்டைச் சுமத்தத் தொடங்கியுள்ளார்கள்.

இது அமெரிக்காவின் நிர்ப்பந்தமே என ஈரான் அமெரிக்கா மீது குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால் சந்தேகத்திற்கிடமான அனைத்து இடங்களையும் சோதனை நடத்த அனுமதிக்க வேண்டும் என ஈரானை ஐரோப்பிய ஒன்றியமும், ரஷ்யாவும் எச்சரித்துள்ளதுடன், இதனை அனுமதிப்பதற்கான ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடுமாறும் அவை வலியுறுத்தியுள்ளன.

அத்துடன் இவையனைத்துமே நிறைவேற்றப்படாதவிடத்து ஈரான் மீது நடவடிக்கை எடுக்கவும் ஐரோப்பிய ஒன்றியம் இணக்கம் காட்டியுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் அதாவது ஐரோப்பிய ஒன்றியத்தின் எச்சரிக்கை, அணுசக்தி ஆய்வாளர்களின் தற்போதைய கூற்று ரஷ்யாவின் எச்சரிக்கை என்பனவெல்லாம் அமெரிக்காவைச் சந்தோசத்தில் ஆழ்த்தியுள்ளது எனலாம்.

அது மட்டுமன்றி இஸ்ரேலும் வடகொரியாவைவிட ஈரானின் அணுத்திட்டம் குறித்து கவனம் செலுத்துமாறு அமெரிக்காவிடம் கோரிக்கை விடுக்கக் காரணம் இல்லாமலில்லை.

ஈரானிடமுள்ள ஏவுகணைகள் அனைத்துமே இஸ்ரேல், சைபிரஸ், கிரேக்கத்தை எட்டக் கூடியவை என்று கூறப்படுவதால், ஈரானிடம் அணுகுண்டும் இருந்தால்..... என்பதாலேயே இஸ்ரேல் முந்திக் கொண்டு அமெரிக்காவிடம் கோரிக்கை வைத்துள்ளது.

ஆ. கலைவாணி

அது மட்டுமன்றி ஈரான் எப்படி ஈராக் விடயத்தில் நடுநிலைமையைக் கடைப் பிடித்ததோ, அதே போல் பலஸ்தீன விடயத்திலும் உள்ளதாகக் கூறப்படுகின்றது. பலஸ்தீனம், பலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்; வெளியேறிய அகதிகள் திரும்பவும் நாடு திரும்ப வேண்டும்; சமாதானம் என்ற போர்வையில் பலஸ்தீனர்களுக்கு அநீதி விளைவிக்கப்படக் கூடாது என்றெல்லாம் கூறுவது கொஞ்சம் கூட இஸ்ரேலுக்குப் பிடிக்-காத விடயங்கள்.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டுதான் இஸ்ரேல் அமெரிக்காவிடம் கோரிக்கை எனும் பெயரில் தனது ஆசைகளை வெளியிட்டுள்ளதாக அவதானிகளிடையே நிலவும் கருத்தாகவுள்ளது.

அதேபோல் அமெரிக்காவுக்கும் ஈரான் பெரும் தலைவலிதான். ஈராக் விடயத்தில் அதன் தலையீட்டைச் சகிக்க முடியாமையினால் அதனை எப்படி ஓரம் கட்டுவது என்று சிந்தித்ததன் மூலமே ஈரானை மிகப் பயங்கர அணுவாயுத தயாரிப்பு நாடாக உலகிற்குக் காட்ட முனைந்துள்ளது. உலகம் அப்படியா... என நியாயத்தைத் தேடுவதற்குள் ஈரான் அமெரிக்காவின் காலடியில் மிதியுண்டும் போய்விடலாம்.



கொலின் பவல்

ஏற்கனவே 1982 இல் ஈராக்கில் அணுவுலைகள், ஆராய்ச்சியிடங்கள் என அனைத்தையுமே அணுவாயுதத் தயாரிப்பின் முளையிலேயே விமானம் மூலம் தூளாக்கி யுள்ள அமெரிக்கா ஈரானை மட்டும் விட்டு வைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அதனது புதிய அணுவுலைகளையோ, ஆராய்ச்சியிடங்களையோ அழிக்காதுவிடும் என நம்ப



கண்டலீஸா றைஸ்

முடியாது என்றும் எதிர்பார்க்கப்படுவதால்,

ஈரான் பலத்த நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது என்றால் மிகையாகாது. ஒரு பக்கம் உள்நாட்டில் மாணவர் போராட்டங்கள், மறுபுறம் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் ஈரான் மீது குறி வைத்துக் கொண்டிருக்கின்றன.

எனவே இந்த இக்கட்டான சூழ்நிலைகளிலிருந்து ஈரான் தன்னை எப்படிப் பாதுகாத்துக் கொள்ளப் போகின்றது என்பதே தற்போதைய வினாவாகும்.

---

### - ஈராக்கிற்கு படைகள் அனுப்புவதில்லை -

# இந்தியாவின் முடிவால் உறவில் பிரச்சினை எழாது

### - அமெ. வெளியுறவுத்துறை அதிகாரி

(வாஷிங்டன்)

ஈராக் நாட்டிற்கு படைகளை அனுப்புவது இல்லை என்று இந்தியா எடுத்துள்ள முடிவால் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள உறவில் பிரச்சினை எதுவுமே இருக்காது என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அதிகாரி றிச்சட் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஈராக் நாட்டின் ஸ்திர நிலைத்தன்மையை ஏற்படுத்துவதில் அமெரிக்காவின் நலன் இருப்பது போலவே இந்தியாவின் நலனும் அடங்கி இருக்கின்றது என்று தான் நம்புவதாகக் கூறியுள்ளார்.

ஈராக்கிற்கு மற்றைய நாடுகள் படைகளை அனுப்புவதை இந்தியாவின் முடிவு பாதிக்காது என்றும் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

---

# ராமர் கோவில் குறித்த சட்டம்; பா.ஜனதா செயற்குழுவில் முடிவு எடுக்கப்படும்!

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு சட்டம் கொண்டு வருவது பற்றி வரும் வெள்ளிக்கிழமை ராய்ப்பூரில் தொடங்கும் பாரதீய ஜனதா செயற்குழுக் கூட்டத்தில் முடிவுவெடுக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் இந்தச் சட்டம் நாட்டின் மத சார்பின்மையைச் சீர்குலைத்து விடுமென முஸ்லிம் சட்ட வாரியம் எச்சரித்துள்ளது.

காஞ்சி சங்கராச்சாரியாரின் சமரசத்திட்டத்தை முஸ்லிம் வாரியம் நிராகரித்துள்ள நிலையில் சர்ச்சைக்குரிய இடத்தில் ராமர் கோயில் கட்ட சட்டம் கொண்டு வரும்படி பிரதமர் வாஜ்பாயை, ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர்.

அதை ஏற்றுக் கொண்ட பிரதமர் அது பற்றி பரிசீலிக்க ஒத்துக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் வரும் வெள்ளிக் கிழமை ராய்ப்பூரில் தொடங்கும் பாரதீய ஜனதா செயற்குழுக் கூட்டத்தில் ராமர் கோயில் கட்ட சட்டம் கொண்டு வருவதற்கு விவாதிக்க முடிவு எடுக்கப்படும் என கட்சியின் மூத்த தலைவர்கள் கூறியுள்ளனர்.

இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள முஸ்லிம் சட்ட வாரியம், இச்சட்டம் நாட்டில் மதசார்பற்ற தன்மைக்கு விரோதமானது என்று கூறியதுடன், இச்சட்டம் சிறுபான்மை மக்களின் மனங்களில் தேவையில்லாத பயத்தை உருவாக்கும் எனவும் கூறியுள்ளது.

மேலும் இது உலக அரங்கில் இந்தியாவுக்கு பெரிதும் அவப் பெயரை ஏற்படுத்தும் என்றும் சட்ட வாரியம் கூறியுள்ளது.

# முல்லை. வைத்தியசாலை கட்டம் I

# அபிவிருத்தி பின்னடையக் காரணம் என்ன?

## மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளருடனான நேர்காணல்

**கேள்வி: முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை கட்டம் - Iஇன் அபிவிருத்தியின் பின்னடைவுக்குக் காரணம் என்ன?**

உலக வங்கியின் உதவியால் முல்லைத்தீவு மாவட்டம் கட்டம்-I ஒன்று என இருக்கும் வைத்தியசாலை ஒரு பொது வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்படுவதே அரசின் புதிய கொள்கை ஆகும்.

இதன் அடிப்படையில் தான் உலக வங்கி, உலக சுகாதார நிறுவனம், சிரான் ஆகிய நிறுவனங்கள் இவ்வேலைத் திட்டத்தைச் செய்ய முன்வந்துள்ளன.

ஆனால் இதுவரை இத்திட்டங்கள் எதுவுமே முன்னெடுக்கப்படவில்லை. எழுத்து மூலமாக பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றதே தவிர, எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

இவை தவிர முல்லைத்தீவு கட்டம்-Iஇற்கான கட்டடங்கள் அமைப்பதற்கான இடங்கள் எதுவுமே சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்படவில்லை என்பதுடன், இவையனைத்தையும் எமது தலைமை அலுவலகங்களுக்கு தெரியப்படுத்த தொலைத் தொடர்பு வசதிகளும் இல்லை.

அத்துடன் வீதிகளில் கிரவல் போடப்பட்டுள்ளதால் பருவ கால மழையுடன் இவை அள்ளுப்பட்டுப் போய்விடும். இதனால் அவசர நோயாளர்களை எடுத்துச் செல்வதிலும் சிரமங்கள் ஏற்படும்.

எனவே வீதிகள் தார் போட்டு புனரமைக்கப்பட வேண்டும்.

மேலும் ஏனைய மருத்துவர்கள் வந்து தங்குவதற்கு விடுதிகள் அமைக்க நாங்கள் முன்மொழிவுகளை வழங்கியுள்ளோம். ஆனால் விடுதிகள் கட்டப்படவில்லை.

இவையனைத்தையும் செய்து முடிக்க அரச அதிபர், தமிழீழ சுகாதார சேவைகள், அரசியல்துறை ஆகியோரின் உதவிகள் தேவை. இவர்களின் உதவிகள் கிடைக்கும் போது வைத்திய சாலை கட்டியெழுப்பப்படும்.

**கேள்வி: செம்மலையிலிருந்து முள்ளிவாய்க்கால் வரையிலான மக்களின் மருத்துவ வசதிகள் கேள்விக் குறியாக இருப்பதாக மக்கள் கருதுவதால், இது தொடர்பான தங்களின் கருத்து என்ன?**

உண்மை! முல்லைத்தீவு செம்மலை வரையான பகுதி மட்டுமல்ல இந்தப் பிரச்சினை நட்டான்கண்டலிருந்து முல்லைத்தீவு வரைக்கும் இருக்கின்றது. மருத்துவர்கள் பற்றாக்குறை, கட்டட வசதியின்மை போன்ற பல பிரச்சினைகளும் முல்லைத்தீவு கட்டம் ஒன்றில் தங்கி உள்ளது.

இது போன்ற பல பிரச்சினைகளில் ஆளணி என்பது உடன் கிடைக்காத ஒன்று. உதாரணமாக, முள்ளியவளை வைத்தியசாலையிலுள்ள மருத்துவருக்கு ஏதாவது ஒரு சிக்கல் ஏற்பட்டால் பதிலுக்கு அவருடைய கடமையை செய்ய யாரும் இல்லை. அதாவது பதில் மருத்துவர் இல்லாமை நிலவுகின்றது. இதனால் வைத்தியசாலையை இழுத்து மூடத் தான் வேண்டிய நிலை ஏற்படும். நாங்கள் என்ன மேலதிகமான மருத்துவர்களையா வைத்திருக்கின்றோம்? சில வளங்களுடனும், சில திறமையான ஒன்றிரண்டு பேரைக் கொண்டுதான் செலுத்துக்கின்றோம். ஆகையால் உண்மையில் எமக்கு மக்களும் மற்றவர்களும் ஒத்துழைப்புத்தர வேண்டும்.

**கேள்வி: கட்டடம் கட்டுவதற்கு ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்தால் அது தொடர்பாக நீங்கள் என்ன கருத்துக் கூறுவீர்கள்?**

அரசாங்கம் தான் கட்டடங்களை அமைக்க வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஒரு பொது வைத்தியசாலை இருக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இதனை அரசியல் ரீதியாகவும் அணுகி இந்த வேலைத் திட்டத்திற்கு என்ன இடர்பாடு, என்ன தடங்கல், என்ன செய்யலாம் என்பதைப் பார்க்க வேண்டும்.

அரசாங்கம் ஏன் செய்யவில்லை என்பதை ஆராய்ந்து, அரசியல் ரீதியாகவும் அழுத்தங்களைக் கொடுத்தால் தான் பொது வைத்தியசாலையை அரசாங்கம் கட்டித்தரும்.

பணம் இல்லை என அரசாங்கம் சாக்குப் போக்குக் கூறினால், அவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறிவிட்டே, நாம் அவற்றை செய்ய முற்பட வேண்டும்.

**கேள்வி: இதுவரை எந்தவிதமான அரச நிதியும் முல்லை. மாவட்டம் கட்டம் ஒன்றிற்குத் தரப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன?**

ஆசிய அபிவிருத்தி வங்கி தரும் நிதியை தான் அரசாங்கம் 'நிக்கோட்' எனும் நிறுவனத்தைக் கொண்டு வேலைகளைச் செய்கின்றது. அது போலவே 'நீர்ப்பு' எனும் நிறுவனம் ஊடாகவும் சில வேலைத் திட்டங்கள் செயற்படுகின்றன.

அதேபோன்று சிரான் தற்போது இக்கட்டடவேலைகளைச் செய்யப் போவதாக கூறப்பட்டது. ஆனால் தற்போது அந்தக் கதையே இல்லை.

**கேள்வி: இந்த விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசாங்கத்தோடு அல்லது விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டீர்களா?**

அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டோம். உலக சுகாதார நிறுவனம் வரைபடம் தயாரித்துள்ளார்கள் என்று கூறினார்கள். எங்கே வரைபடத்தை தாருங்கள் என்று கூறினோம். ஆனால் தரப்படவில்லை. தற்போது சி.சி. நாட்டில் இல்லை. அவர் வெளிநாடு சென்றுவிட்டார். ஒரு மாதம் கழித்தே வருவார் என்று கூறியுள்ளார்கள்.

**கேள்வி: இந்த அபிவிருத்தி வேலைகள் ஒட்டுமொத்தமாக பின்னடையக் காரணம் என்ன?**

முதலாவது மேல் மட்டத்திலுள்ள அசட்டையீனம் காரணமாகும். அடுத்தது தொழிலாளர் பற்றாக்குறை ஆகும். அதாவது தொழில்நுட்பத்துறை சார்ந்த ஆற்றல் உள்ளவர்கள் இல்லாமை. மரவேலை செய்பவர்கள் (தச்சன்), கட்டட வேலை செய்பவர்கள் (மேசன்) போன்றோர் பற்றாக்குறையாகவுள்ளது.

**நேர்காணல்: சசிலா**

ஏனெனில், கல்வித்திணைக்களம், சுகாதார திணைக்களம் போன்றனவும் ஏனைய திணைக்களங்களும் புதிது புதிதாக கட்டடங்கள் கட்டுவதால்தான் பற்றாக்குறை நிலவுகின்றது.

இவற்றை நிவர்த்தி செய்ய அரசாங்கம் உட்பட அனைவரும் கவனம் எடுக்க வேண்டும்.

எல்லோருமே சேர்ந்து செய்யாதுவிட்டால் அபிவிருத்தி பின்னடையும் தானே. எனவே எல்லோரும் இணைந்து முல்லை. மாவட்டப் பொது வைத்தியசாலையை முல்லை. மாவட்டத்தில் கட்டியெழுப்ப ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

---

## கொழும்பில் கடந்த ஒருவாரத்தில் 450 பேர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் கடந்த 05ம் திகதி முதல் கடந்த 11ஆம் திகதிவரை சிறிலங்காப் படையினரும், பொலிசாரும் இணைந்து நடத்திய தேடுதலில் 450 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது 324 ரோந்து நடவடிக்கைகளை பொலிசார் மேற்கொண்டதுடன், 74 வீதிச்சோதனைகளையும் நடத்தியுள்ளனர். இதன் மூலமே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் திணைக்களம் கூறியுள்ளது. இதேவேளை பொலிசாரின் சோதனையின் போது அடையாள அட்டை எடுத்துச் செல்லாத 70 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செய்தியில் பிள்ளைகளின் பெயர்கள் சனாதிபதி சந்திரிகா ஆட்சேபம்

(கொழும்பு)

அண்மையில் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளில் தனது பிள்ளைகளின் பெயர்கள் இடம் பெற்றிருப்பதற்கு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்.

சனாதிபதியின் வெகுசனத் தொடர்புப் பணிப்பாளர் இது குறித்துத் தெரிவிக்கையில், அரச சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளில் இது குறித்து வெளிவந்துள்ள செய்திகளில் தனது பிள்ளைகளின் பெயர்கள் இடம்பெற்றிருந்தமைக்கு ஆட்சேபம் தெரிவித்து, வெகுசனத் தொடர்புகள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## வவுனியா புகையிரத நிலையத்தில் மாணவர்களுக்கான கண்காட்சி

(வவுனியா நிருபர்)

வவுனியா புகையிரத நிலையத்தில் கண்காட்சி ஒன்று நடைபெற்று வருகின்றது.

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான சகலவிதமான செயற்திட்டங்களையும் கொண்ட கண்காட்சியாக இது அமைந்துள்ளது. ஆண்டு 06 முதல் 13 வரையிலான மாணவர்கள் தமது ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 9ஆம் திகதி ஆரம்பமான இந்தக் கண்காட்சி எதிர்வரும் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. வடக்கு பகுதியில் பின்தங்கிய மாணவர்களாக உள்ளவர்கள் இதன் மூலம் தம்மை மேம்படுத்த முடியும் என்றும் கூறப்படுகின்றது. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ். மாவட்டம் ஆகிய இடங்களில் இருந்து பெருமளவான மாணவர்களை தாம் எதிர்பார்ப்பதாக ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். (10)

## தகவல் தொழில்நுட்பப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சி!

தகவல் தொழில்நுட்ப பாடத்தை கல்வியமைச்சு பாடசாலைகளில் அறிமுகப்படுத்தியுள்ளதால் இத்துறையில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சிகளை நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வி நிறுவகம் என்பவற்றினூடாக வழங்குவதற்கு கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் அபிவிருத்தி தொடர்பான கற்கைநெறி, தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமாக் கற்கைநெறி, தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் படிப்புக் கற்கைநெறி என்பன தொடர்பாக ஆசிரியர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக கல்வி அமைச்சு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

முற்றிலும் இலவசமாக வழங்கப்படவுள்ள இப்பயிற்சி நெறிக்கான கட்டணங்களை உலக வங்கியின் ஆசிரியர் கல்வி, ஆசிரியர் நிலையியற் செயற்திட்டம் மூலம் கல்வி அமைச்சு பல்கலைக்கழகங்களுக்கும், தேசிய கல்வி நிறுவனங்களுக்கும் செலுத்தும்.

இத்திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 230 ஆசிரியர்கள் முதற்கட்டமாக பயிற்சி நெறிக்குச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக கல்வி மனிதவள அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் இந்திராணி காரியவசம் அறிவித்துள்ளார்.

## -2003 க.பொ.த.சா/த. பரீட்சார்த்திகள்- தேசிய அடையாள அட்டைக்கு அக். 31க்கு முன் விண்ணப்பிக்கவும்

2003 டிசம்பர் மாதம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டையைப் பெற அக்டோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளர் விஜயரணசிங்க தெரிவித்துள்ளார்.

16 வயதான பாடசாலை மாணவர்கள் அடையாள அட்டை பெறும் நடைமுறையை இலகுபடுத்தும் முகமாக திணைக்கள அதிகாரிகளை பாடசாலைக்கு அனுப்பி இலகுவான முறையில் அடையாள அட்டையைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இத்திட்டத்தை பாடசாலை அதிபர்களின் உதவியுடன் செயற்படுத்தப்படவுள்ளதாகவும், கூறிய அவர். பாடசாலை மாணவ தலைவர்களுக்கு இந்த நடவடிக்கை குறித்து பயிற்சியளிக்கவும் திட்டமிட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

## - தாய்புரு கொலை தொடர்பான - விசாரணை அறிக்கையை சனாதிபதி கோருகின்றார்

சிறிலங்கா புலனாய்வு அதிகாரி சுனில் தாய்புருவின் கொலை தொடர்பான விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்த ராஜாவைக் கோரியுள்ளார். இந்த விசாரணைகள் ஏற்கனவே முடிவடைந்து விட்டதை சனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மைக் காலத்தில் அரசாங்கப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த 50 பேரளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## எண்ணெய் ஆய்வு வேலைகள் அடுத்த ஆண்டு ஆரம்பமாகும்

இலங்கையில் எண்ணெய் ஆய்வு வேலைகள் அடுத்த ஆண்டு முதல் ஆரம்பமாகவுள்ளது.

முதலீட்டாளர்கள் நவம்பர் மாதத்தில் இலங்கைக்கு அழைக்கப்படுவார்களென அமைச்சர் கருஜெயசூரிய கூறியுள்ளார்.

நாட்டின் கரையோரப் பகுதியில் எண்ணெய் வளம் காணப்படுமானால் அதன் மூலம் மக்கள் பெரும் நன்மையடைவார்களென அவர் மேலும் கூறியுள்ளார்.

# தொழிற்சங்கங்களை ஒன்றிணைக்க எதிர்க்கட்சித்தலைவர் தீவிர முயற்சி

**இலங்கையிலுள்ள தொழிற்சங்கங்களில் பெரும்பாலான வற்றை ஒன்றிணைக்கும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தீவிர நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிய வருகிறது.**

தொழிலாளர்களின் உரிமை பறிப்பு, தொழிற்சங்க உரிமைகளைக் கட்டுப்படுத்தல், அரசாங்க நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தல், சம்பள உயர்வு வழங்கப்படாமை, ஓய்வூதியம் நிறுத்தப்பட்டமை ஆகிய காரணங்களை முன்வைத்து தொழிற்சங்கங்களை ஒன்றிணைப்பதற்கு அவர் நடவடிக்கைகளை எடுத்துவருகிறார்.

இதற்காக பொ.ஐ.முன்னணி தொழிற்சங்கங்களோடு மட்டுமல்லாது ஐ.தே.கட்சி முன்னணியின் தொழிற்சங்கங்களோடும் மற்றும் வர்த்தக சங்கம், வங்கி ஊழியர் சங்கம் ஆகியவற்றோடும் அவர் கலந்துரையாடிவருவதாகத் தெரிய வருகிறது.

## - பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் -

# கைது செய்யப்பட்ட நபர் நீதிமன்றால் விடுதலை!

(திருமலை)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் திருகோணமலை மேல்நீதி மன்றத்தினால் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த தேவராஜ் ராஜேந்திரகுமார் என்பவரே தடைசெய்யப்பட்ட ஆயுதமான T 56 ரக துப்பாக்கி ஒன்றையும் 22 ரவைகளையும் வைத்திருந்தார் எனும் குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார். எனினும் இவர் மீதான குற்றச்சாட்டினை அரச சட்டத்தரணி மீளப் பெற்றதைத் தொடர்ந்தே அவர் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

சிறிலங்கா கடற்படைச் சிப்பாய் ஒருவருக்கு மரணம் விளைவிக்க முயன்றார் என்னும் அவர் மீதான மற்றுமோர் குற்றச்சாட்டையும் அரச சட்டத்தரணி மீளப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கசிப்பு வியாபாரி கைது

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சேரன் வீதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 13 ஆம் திகதி மூன்று லீற்றர் கசிப்புடன் கைதாகி விசாரணைக்காக நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டாலும், விற்பனை செய்தாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என காவல் துறையினர் எச்சரித்துள்ளனர் (12)

## ஆட்லறி ஷெல்கள் மீட்பு

(இயக்கச்சி)

முள்ளிப்பற்று இயக்கச்சி பகுதியில் கிணறு துப்பரவு செய்யும் போது 03 ஆட்லறி ஷெல்களும் கால்மேன் ஒன்றினுள் அதிகளவான வெடிக்காத தோட்டாக்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

## சிப்பாய் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமில் கடந்த ஞாயிறு மாலை கடற்படைச் சிப்பாயொருவர் கைக்குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்துள்ளார்.

கண்டியைச் சேர்ந்த அகலகுமார (25 வயது) என்பவரே இவ்வாறு கைக்குண்டை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டார்.

இவரது சடலம் யாழ். வைத்திய சாலையில் வைக்கப்பட்டு மரண விசாரணை முடிவடைந்ததையடுத்து நேற்று முன்தினம் சடலம் கண்டிக்கு அனுப்பப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வதிரிப் பகுதியில் இராணுவம் திடீர் சோதனை நடவடிக்கை

## கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் முறையீடு

வடமராட்சியின் வதிரி மற்றும் முள்ளிப் பிரதேசங்களில் இராணுவத்தினரும்பொலிசாரும் இணைந்து நேற்றுமுன்தினம் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதிக்கு நேற்றுக் காலை 9.00 மணியளவில் வந்திறங்கிய இராணுவத்தினரும், பொலிசாரும் மாலை 3.00 மணி வரையும் வீதித் தடைகளை இட்டுச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கைகளில் 50க்கு மேற்பட்ட இராணுவத்தினரும் பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர். இதன்போது வீதியால் சென்ற சகல வாகனங்களும் மறிக்கப்பட்டு, பயணிகள் இறக்கப்பட்டுச் சோதிக்கப்பட்டனர்..

இவ்வாறு அண்மைக் காலங்களில் இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகள் இப்பகுதிகளில் அதிகரிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சிப் பகுதி அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா 'யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார். (33)

## மீனவர் தங்குமிடம்

முல்லைத்தீவு கரையோரப் பகுதிகளான செம்மலை, அளம்பில், சிலாவத்தை, கள்ளப்பாடு மத்தி, கள்ளப்பாடு வடக்கு, வண்ணாங்குளம், மணற்குடியிருப்பு, வட்டுவாகல், செல்வபுரம் ஆகிய ஒன்பது கிராமங்களில் மீனவர் தங்குமிடம் அமைப்பதற்காக நிக்கோட் நிறுவனம் நான்கு மில்.ரூபா. நிதி ஒதுக்கியுள்ளது.

இதற்கான கேள்வி அறிவித்தல் கோரியபோதும் எவரும் இதுவரை முன்வரவில்லையெனவும் முல்லை. மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு.ந.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (20)

## -கடற்பரப்பில் வீரச்சாவடைந்த-

# 12 விடுதலைப்புலிகளுக்கு வவு. உக்குளாங்குளத்தில் அஞ்சலி

கடந்த 14.06.2003 அன்று சர்வதேச கடற்பரப்பில் வீரச்சாவைத்தழுவிக்கொண்ட 12 வேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்தும் நினைவு நிகழ்வுகள் வவுனியா மாவட்டத்தில் உக்குளாங்குளம் பைற்றர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி அலை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செங்கதீர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து 12 மாவீரர்களுக்கும் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. நினைவுரைகளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் ச.குலதேவராஜா, வவுனியா மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செங்கதீர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வினைக் குழப்ப சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் கடும் முயற்சிகளை மேற்கொண்டபோதும் அதனையும் மீறி மக்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (10)

யானைமார்க் யானைமார்க் யானைமார்க் யானைமார்க் யானைமார்க் யானைமார்க் யானைமார்க் யானைமார்க் யானைமார்க் யானைமார்க்

சிறிலங்காவின் முதல்தர கூரைத்தகடான "யானைமார்க்" கூரைத்தகடுகள் இப்பொழுது உங்களின் வாசலிலும் வருகை தந்துள்ளது.

ஆம்! வன்னிக்கும் வனப்பூட்ட வந்து விட்டது.

'மஸ்கன்ஸ்' நிறுவனத்தாரின் சிறப்புத்தயாரிப்பான 'யானைமார்க்' கூரைத்தகடுகளின் கீழ் உங்கள் வாழ்வும் வளம் பெற இன்றே வாங்குங்கள்.

"யானைமார்க்" கூரைத்தகடுகளை தேடி அலையாமல் நாடவேண்டிய இடம்

மொத்தமாகப் பெற்றுக்கொள்ள

பாண்டியன் வாணிபம்

கரடிப்போக்கு கிளிநொச்சி

யானைமார்க் கூரைத்தகடுகள்



சில்லறையாக பெற்றுக்கொள்ள அருகிலுள்ள பாண்டியன் கிளைகளை நாடுங்கள்

பாண்டியன் வாணிபம்

புதுக்குடியிருப்பு பாண்டியன் வாணிபம்

(C-8304)



## சிந்தனைக்கு

மக்கள் ஆதரவுடன் மக்களின் மேம்பாட்டிற்காக நிகழ்த்தப்படும் சமூகச் சீரமைப்புக்களே நிரந்தரமானதாக நிலைத்து நிற்கும்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 17-07-2003

## மாநில அரசுகள்போல்...!

தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து இந்தியாவிற்கு விளக்கம் அளிக்க பொ.ஐ. முன்னணி தீர்மானித்துள்ளது. ஆகையினால், பொ.ஐ.முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் விரைவில் இந்தியா செல்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

இலங்கையின் அரசியல் நிலவரம் குறித்தும், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்தும் ஆளும், எதிர்க்கட்சிகள் குறிப்பாகப் பிரதான கட்சிகள் இரண்டும் அண்மைக்காலமாக இந்தியாவிற்கு விளக்கம் அளிப்பதை மரபாக்கிக் கொண்டுள்ளன. இந்த வரிசையில் ஜே.வி.பி.யும் இணைந்து கொண்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

இலங்கைக்கென இந்தியாவின் தூதுவர் ஒருவர் கொழும்பில் உள்ளார். ஒரு தூதுவராலயமும் உண்டு. அதில் பலதரப்பட்ட அதிகாரிகளும் கூட உள்ளனர். இவர்கள் அனைவருமே இலங்கையில் நடைபெறும் அரசியல் மற்றும் நடவடிக்கைகளை அவதானித்த வண்ணமே உள்ளனர். அது மட்டுமல்ல, தேவை கருதி ஆளும், எதிர்க்கட்சிகள் மற்றும் தமிழ்க் குழுக்களையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியே வருகின்றனர். சில சமயங்களில் இந்தியாவின் எதிர்பார்க்கைகளை வெளிப்படுத்துபவர்களாகவும் உள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினை என்பது இந்தியாவின் எல்லைக்கு அப்பாற்பட்ட மண்ணில் இடம்பெற்று வருகின்றதாயினும், இந்தியாவில் அது பாதிப்புக்களை விளைவிக்கும் என்ற அபிப்பிராயம் இந்திய தரப்பில் இருப்பதினாலும், இப்பிராந்தியத்தின் பலம் பொருந்திய சக்தியாக இந்தியா இருப்பதினாலும் இனப்பிரச்சினை போன்ற தீவிர பிரச்சினைகளில் இந்தியா ஆர்வம் கொண்டுள்ளமை வெளிப்படையானது.

ஆனால், இவற்றைக் கவனிக்கவே இந்தியத் தூதுவராலயம் இங்குள்ளது. சில வேளைகளில் மிக முக்கிய தீர்மானங்களை சிறிலங்கா அரசு எடுக்க வேண்டியதொரு சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில்-அத் தீர்மானம் இந்திய நலன்களைப் பாதிக்குமா? அன்றி அத்தீர்மானம் குறித்து இந்தியாவின் ஆலோசனை/நிலைப்பாடு என்ன? என்பதை அறிய வேண்டிய தேவையிருப்பின் சிறிலங்கா அரசியல் தலைவர்கள் இந்தியாவிற்குப் பயணங்களை மேற்கொள்ளலாம். இதில் ஓரளவு நியாயப்பாடும் உண்டு.

இதற்கு மாறாக, தற்பொழுது சிறிலங்காவின் ஆட்சித் தலைவர்கள் வாரா வாரம் இந்தியாவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பது போல் நடந்து கொள்வதானது இவர்களின் பலவீனத்தின் வெளிப்பாடே ஆகும். அதிலும் குறிப்பாகச் சிறிலங்கா அரசியலில் எந்தவித திருப்பமோ, மாற்றமோ ஏற்படாத நிலையில் இந்தியாவிடம் இவர்கள் எதுபற்றி விளக்கிக் கூறப் போகிறார்கள்.

சிறிலங்காவில் கடந்த பல வருடங்களாகச் சட்டம், ஒழுங்கு சீர்கெட்ட நிலையிலேயே உள்ளது. பாதாள உலகக் கோஷ்டிகளின் நடவடிக்கைகள், அரசியல்வாதிகள் படுகொலைகள், பாலியல் வன்முறைகள், மோசடிகள் எனச் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுப் போயுள்ளது. இச் சீர்கேட்டிற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. திறந்த பொருளாதாரக் கொள்கையில் இருந்து அரசு நடத்தி வந்த தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் வரையில் இதற்குக் காரணமாகியுள்ளன.

ஆனால், இவற்றை அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டாகக் கொண்டு இந்தியாவிற்கு விளக்கம் அளிக்க சிறிலங்கா எதிர்க்கட்சியினர் முனைவதானது, இந்திய மாநிலம் ஒன்றின் எதிர்க்கட்சி ஒன்று மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது. ஆளும் கட்சிக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என மத்திய அரசை வற்புறுத்துவதற்கு ஒப்பானதாகும். அதாவது மாநிலத்தில் ஆளும் கட்சியை மத்திய அரசு எச்சரிக்க வேண்டும் அல்லது பதவி நீக்க வேண்டும் எனக் கூறுவது போன்றதாகும்.

இருப்பினும், இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து பிராந்திய வல்லரசு என்ற ரீதியில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியினரும் தமது அபிப்பிராயத்தை இந்தியாவிற்குத் தெரிவிப்பது ஓரளவு பொருத்தப்பாடானதொன்றே. ஏனெனில், இலங்கை இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வில் இந்தியாவின் பங்களிப்பு அவசியமானதெனக் கருதப்படுவதினால் இது ஏற்புடையதொன்றாகக் கொள்ளத்தக்கது.

ஆனால், இது கூட இன்று அவசியம்தானா என்ற நிலையை இந்தியாவின் நடவடிக்கைகள் உருவாக்கி உள்ளதாகவே எண்ண வேண்டியுள்ளது. ஏனெனில், ஆளும் கட்சியும் சரி, எதிர்க்கட்சிகளும் சரி, மற்றும் யாராகிலும் சரி இந்தியாவிற்கு எத்தகைய விளக்கத்தை அளிப்பினும் இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு அது ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் மேற்கொள்கின்றதா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. ஏனெனில், இந்தியா இனப்பிரச்சினை விடயத்தில் வெளிப்படையான நகர்வுகள் எதையும் மேற்கொள்ளத் தயாராக இல்லை.

இதேவேளை, இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் பொதுவான அணுகுமுறை தமிழ் மக்களினதும், விடுதலைப்புலிகளினதும் நலனுக்குப் பாதகமானதாகவுள்ள நிலையில்-விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொள்பவர்கள் இந்தியாவின் ஆதரவை சுலபத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கலாம். இதனால் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தும் அரசிற்கு எதிராக இந்தியாவிடம் முறையிட எதிர்க்கட்சி முனையலாம். ஆனால், அது இலங்கையில் நிலவும் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் கொண்டு வந்துவிட மாட்டாது என்பது யதார்த்தமானது.

-ஆளும், எதிர்க்கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில்-

# சமரசத் தீர்வா? யுத்தமா?

# கருத்துக்கணிப்பிற்கு ஏற்பாடு

நாட்டின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என அரசாங்கத்திற்கும் எதிரணியினருக்கும் மற்றும் அரசியல் கட்சிகளுக்கும் அழுத்தம் கொடுக்கும் வகையில் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதியளவில் நாடெங்கிலும் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை நடத்த மனிதாபிமான உதவிகளுக்கான அமைப்பு ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த அபிப்பிராய வாக்கொடுப்பை தொண்டர் ஸ்தாபனங்கள் ஒன்று கூடி நடத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அபிப்பிராய வாக்கெடுப்புக் குறித்துப் புலிகள் இயக்கத்தின் ஆதரவை பெறும் வகையில் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக "பெப்ரல்" அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்றிகோ விபரிக்கையில்;

அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் காரணமாக எப்பொழுது அரசியல் தீர்வு ஏற்படும் என்பது எவருக்கும் தெரியாது.

என்னதீர்வு ஏற்படும் என்பதைத்திட்டவட்டமாகக் கூறவும் முடியாது. ஆகையால் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண அரசியல் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் எனும் நோக்கிலேயே இந்த சர்வசன வாக்கெடுப்பை நடத்தவுள்ளோம்.

இலகுவான சில கேள்விகள் மாத்திரமே வாக்காளர் முன்வைக்கப்படும். குறிப்பாக யுத்தமா? சமரசத் தீர்வா? அரசு தனித்துசமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டுமா?அல்லதுஎதிரணியும் இணைய வேண்டுமா? எனும் கேள்விகளே முன்வைக்கப்படும்.

எமது அமைப்புகளுக்கு நாடளாவிய ரீதியில் கிளைகள் இருப்பதால் சர்வசன வாக்கெடுப்பை நடத்த முடியும். அத்துடன் எமது அமைப்புக்களில் கடமை புரியும் தொண்டர்களை தேர்தல் கடமைகளிலும் ஈடுபடுத்தலாம்.

அரசாங்க ஊழியர்களோ தேர்தல் திணைக்களமோ இதில் சம்பந்தப்படமாட்டாது. சாதாரண செலவு மட்டுமே ஏற்படும். தேவை ஏற்படின் வெளிநாடுகளின் மனிதாபிமான அமைப்புக்களிடமிருந்து நிதியுதவி பெறலாம் என்றும் கூறியுள்ளார்.

# தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்தும் நடவடிக்கைகள் இடைநிறுத்தும்

மாகாண சபையின் கீழுள்ள அரசாங்க பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தும் நடவடிக்கைகளை கல்வி, மனிதவள பண்பாட்டலுவல்கள் அமைச்சு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக கல்வி மனிதவள பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு அண்மையில் அம்பாறை மாவட்டத்துக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டபோது தெரிவித்தார்.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கணினிக்கற்கை நிலையங்களைத் திறந்து வைக்க வருகை தந்த போது இங்குள்ள சில பாடசாலைகளை தேசிய பாடசாலை அந்தஸ்துக்குத் தரமுயர்த்தித் தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் களும், பாடசாலை அதிபர்களும் கோரிக்கைகளை முன்வைத்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது நாடு முழுவதும் 323 தேசிய பாடசாலைகள் உள்ளன. ஆனால் இவற்றில் பல பாடசாலைகள் தேசிய பாடசாலைகளுக்கான அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருக்கவில்லை.

இவ்வாறான பாடசாலைகளை மீளவும் மாகாண சபைகளிடம் ஒப்படைக்கவேண்டிய அவசியம் கல்வி அமைச்சுக்கு ஏற்பட்டுள்ள அதேவேளை பல முன்னணிப் பாடசாலைகள் சகல தகுதிகள் இருந்தும் தேசிய பாடசாலைகளாகத தரமுயர்த்தப்படாதுள்ளது.

இதனை ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை பாடசாலை மீள் வியூகத் திட்டத்தின் கீழ் பாடசாலை கலைத் தரம் உயர்த்தல் முடிதல் என்பன தொடர்பான வேலைகளை கல்வி அமைச்சு இடைநிறுத்தி உள்ளதாகவும் கல்வியமைச்சின் செயலாளர் வி. கே. நாணயக்கார அறிவித்துள்ளார்.

# புதிய தேர்தல் வழிமுறை பற்றி அரசாங்கம் கவனம் செலுத்துகிறது!

## அமைச்சர் கருஜெயசூரிய

(கொழும்பு)

தாங்கள் விரும்பிய பிரதிநிதிகளை மக்கள் தேர்ந்தெடுக்கும் வகையில் புதிய தேர்தல் வழிமுறை பற்றி அரசு கவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பான நடவடிக்கைகளை ரணில் தலைமையிலான அரசு தற்போது மேற்கொண்டுவருவதாகக் கூறியுள்ளார். நிகழ்வொன்றில் கலந்து கொண்டு நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களின் பங்களிப்பு காரணமாக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான செலவில் அரைப்பங்கை சேமிக்கமுடியுமெனவும் அவர் கூறியுள்ளார்.

## ஒருநாள் கிரிக்கெட் தரப்படுத்தல்; அவுஸ். அணி முதலிடம்!

(லண்டன்)

ஒருநாள்சர்வதேச கிரிக்கெட் தரப்படுத்தலில் அவுஸ்திரேலியா 134 புள்ளிகளுடன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

118 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா இரண்டாம் இடத்தையும், 107 புள்ளிகளைப் பெற்று இங்கிலாந்து மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. 104 புள்ளிகளைப் பெற்ற இந்தியா 05 ஆவது இடத்திலிருந்து 08 ஆம் இடத்திற்கும் பின் நோக்கிச் சென்றுள்ளதாக லண்டனில் வெளியான சர்வதேச கிரிக்கெட் சபையின் ஐ.சி.சி. அறிக்கை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் மூன்றாம் இடத்திலிருந்து 07 ஆம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சதுரங்கப் போட்டியில் முல்லை. இரண்டாம் இடம்

(முல்லைத்தீவு)

மாகாண மட்டத்திலான சதுரங்கப்போட்டியில் முல்லை மாவட்டம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

கடந்த ஒன்பதாம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற இப் போட்டியில் யாழ். மாவட்டம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

முல்லை மாவட்டத்தில் வற்றாப்பளை மாணவர்கள் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (20)

## இந்திய—பாக். உறவு புதுப்பிக்கப்பட வேண்டும்

### - சிங்கப்பூர் கிரிக்கெட் பயிற்சியாளர்

ஆசிய விளையாட்டுத்துறையின் நலன் கருதி இந்தியாவும் பாகிஸ்தானும் தமது கிரிக்கெட் உறவுகளை மீளப் புதிப்பிக்க வேண்டுமென சிங்கப்பூர் அணியின் பயிற்சியாளர் பிரண்டன் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இந்திய பாகிஸ்தான் நாடுகளின் கிரிக்கெட் முறுகல் தொடருமாயின் அது பிராந்திய கிரிக்கெட் துறையையே பாதிக்குமென்றும், வளர்ந்து வரும் சிங்கப்பூர் போன்ற நாடுகளின் கிரிக்கெட் வளர்ச்சிக்கும் குந்தகமாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சச்சினுக்கு அன்பளிப்பு!

இந்திய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கருக்குப் பிரபல கார் பந்தய வீரர் மைக்கேல் சூமேக்கர் ஒரு கோடி ரூபா பெறுமதியான பெராரி 360 மாடேரை எனும் காரைப் பரிசாக வழங்கியுள்ளார்.



# புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்பும்

# சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியாதுள்ளோம்!

## முல்லை. கடற்தொழிலாளர் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் முறையீடு

(அலுவலக செய்தியாளர்)

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் சுதந்திரமாகக் கடற்றொழில் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். எமது சொத்துக்கள் கடற்பரப்பில் வைத்து கடற்



படையால் நாசமாக்கப்படுகின்றன. நாம் தொழிலில் ஈடுபடுகின்ற போது எம்மை நெருங்கும் கடற்படையினருக்கு சைகையைக் காட்டுகின்ற போது அதற்கு மதிப்பளிக்காது தமது படகுகளால் எமது படகுகள் நொருக்கப்படுகின்றது. இவ்வாறு நேற்று தம்மைச் சந்தித்த கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சனிடம் முல்லைத்தீவு மக்கள் முறையிட்டுள்ளனர்

கண்காணிப்புக் குழுவினர் தொடர்ந்தும் பலமுறை எமது பிரச்சினைகளைக் கேட்டறிந்துள்ளனர். இதுவரை எமது பிரச்சினைக்கு எந்தத்தீர்வும் கிடைக்கவில்லை. நாம் தொடர்ந்தும் எமது உயிரைப் பலி கொடுக்கின்றோம். எமது பகுதிகள் எந்தவித புனரமைப்பும் இன்றி உள்ளது என மக்கள் மேலும் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

மக்களின் இந்த முறைப்பாட்டைக் கேட்டறிந்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சன் மக்கள் மத்தியில் உரையாற்றுகையில்:

மீனவர்களின் நெருக்கடிகள் பாதிப்புக்களுக்கு புதிய யோசனைகள் பற்றி நாம் ஆராய்ந்து வருகின்றோம். அதற்கான மாற்றுநடவடிக்கைகள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் மக்களின் அன்றாடத் தொழில் முறையில் ஏற்படும் இத்தகைய தாக்கங்களை நாம் அறியும்போது எமக்கு மிகவும் மனவருத்தமாகவுள்ளது என்றார்.

இன்று நாம் புலிகளின் கடற்படைத்தளபதிகளைச் சந்தித்து கடறபுலிகளின் கட்டுமானப்பணிகள் தொடர்பாகவும் அதன் வளர்ச்சி தொடர்பாகவும் மக்களுக்கு எத்தகைய பணிகளை ஆற்றிவருகிறது என்பது தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டேன். இன்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் 508 நாட்களை பூர்த்தி செய்துள்ளது. ஒப்பந்தம் மக்களின் வாழ்வியலில் மேன்மையான நிலையை அடைய உதவ வேண்டும் என்பதே எமது அவா. மக்களின் பிரச்சினைகள் நாளாந்த வாழ்வியல் நிலைகள் என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு தெரியப்படுத்தினால் நாம் அதற்கேற்ப எமது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். உங்களுக்கும் எமக்கும் நெருங்கிய உறவை ஏற்படுத்த வேண்டும். நீங்கள் தெரிவித்த கருத்துக்கள் உங்கள் பிரச்சினைகள் என்பவற்றை நாம் கவனத்தில் எடுத்து அதற்கான நடவடிக்கைகளை விரைவில மேற்கொள்வோம். உங்களை நாம் சந்தித்ததில் நாம் மிகவும் மகிழ்வடைகிறோம் என கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன் மக்கள் மத்தியில் உரையாற்றும்போது மேலும் தெரிவித்தார்.

கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் நேற்று கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசையைச் சந்தித்து கலந்துரையாடிய பின் முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் சமாசத்திற்குச் சென்று அப்பகுதியில் வசிக்கும் சுமார் நூறு பொதுமக்களைச் சந்தித்து உரையாடியுள்ளார். (லோ,20)



கடற்புலிகளின் படகில் சூசையுடன் ரெலவ்சன்

### - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்-

## வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை நோயாளர் பெரும் அவதி

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் போதிய வைத்திய நிபுணர்கள் இன்மையால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த ஆறு மாதகாலமாக மேற்படி வைத்தியசாலையில் மயக்கமருந்து ஊட்டும் நிபுணர்கள் மற்றும் எக்ஸ்ரே படப்பிடிப்பாளர்கள் இன்மையால் நோயாளர்கள் இத்தேவைகளுக்காகப் போதனா வைத்தியசாலைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவ் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி எஸ்.கதிரவேல்பிள்ளை கவலை தெரிவித்துள்ளார். (33)

## இடிமின்னல்-கனத்த மழை காரணமாக இமாலயப் பிரதேசத்தில் 100பேர் பலி!

(சென்னை)

வடஇந்தியா இமாலயப் பிரதேசத்தில் பெய்த கடும் மழை வெள்ளப் பெருக்கு இடி மின்னல் என்பவற்றால் நூறுபேர் வரை உயிரிழந்துள்ளதாக அஞ்சப்படுகிறது.

பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் நேபாளம், மற்றும் இமாலயப் பிரதேசத்திற்கு அண்டை மாநிலங்களான பீகார் மற்றும் உத்தரப் பிரதேசத்தில் இருந்து வந்து புனல் மின்னிலையம் ஒன்றில் பணியாற்றும் தொழிலாளர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதயில் தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியதுடன், பல வீதிகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# காட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

# பருத்தித்துறையில் பாதுகாப்பு வலயத்தால் பாதிப்பு

## - பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் விசனம்

சிறிலங்கா இராணுவத்தினரின் பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் உள்ளமையால் காட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி என்பவற்றின் எதிர்காலம் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

1996ஆம் ஆண்டு யாழ். குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டதை அடுத்து பருத்தித்துறை முன்பாக அண்டிய பகுதிகளில் படைத்தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்படைத்தளத்தினுள் மேற்படி இரு பாடசாலைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலைக் கட்டடங்கள் சிலவற்றிலும் படையினர் நிலைகொண்டிருந்தனர். ஆயினும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் பாடசாலைக் கட்டடத்திலிருந்து படைத்தரப்பினர் வெறியேறியிருந்த போதும் அச்சூழல் தொடர்ந்தும் படையினர் நிலை கொண்டுள்ளனர். இந்த நிலையில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி செயற்பட்டுவரும் இப்பாடசாலையின் நடவடிக்கைகளுககு அரசு உதவி செய்யப் பின்னடித்து வருவதாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக பாதுகாப்பு வலயப் பகுதிகளில் உள்ள நடவடிக்கைகளுக்கு நிதியுதவிகளைக் கொடுக்க முடியாது என தொர்புடையதொண்டரமைப்புகள் அறிவித்துள்ள தாதகவும் இப்பாடசலையின் அபிவிருத்திச் சங்கங்கள் அறிவித்துள்ளன.

### படையினரை..

குறை நிலவுவதால் நேற்று முன்தினம் முதல் இப்பணியில் உலங்குவானூர்திகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இப்பணியில் இதுவரையும் ஏ.எம்-24ரக விமானங்கள் ஈடுபட்டுவந்ததாகவும் தற்போது அவை பழுதடைந்த நிலையிலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

### யாழ். கரையோர...

வெள்ளை நிறப் பாயையும் பொருத்தியபடி அதே இடங்களுக்குச் சொந்தமான இடத்திலேயே நடமாட முடியும். மாறாக வேறு பகுதிகளில் நடமாடுவதோ கரையேறுவதோ தண்டனைக்குரிய குற்றம் எனவும் மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கடற்படையினர் எச்சரித்துள்ளனர். (33)

### புரிந்துணர்வு...

இதன்போது கடற்புலிகளின் கட்டுமான வளர்ச்சி, அதன் செயற்திறன் பற்றியும் ரெலவ்சன் விரிவாகக் கேட்டறிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது கடற்புலிகளின் பயிற்சி தொடர்பாகவும் அதன் முக்கியத்துவம் பற்றியும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஏற்றுக்கொண்டார். கடந்த தடவை கப்பல் தாக்கப்பட்ட பின்னர் அதில் இருந்த போராளிகள் அனைவரும் கொல்லப்பட்டனர். அந்தச் சம்பவத்தின் பின்னர் கண்காணிப்புக் குழுவினரால் முன்னதைப் போன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாது என உறுதியளிக்கப்பட்டது. அவர்களால் அளிக்கப்பட்ட உறுதிமொழி சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. கண்காணிப்புக்குழுவின் வேண்டுகோளுக்கமையவே எமது போராளிகள் இம்முறை தாமாகவே தம்மை அழிக்கவில்லை. நாம் இறுதிவரை அவர்கள் கண்காணிப்புக்குழுவால் காப்பாற்றப்படுவார்கள் எனவே நினைத்தோம். எமது கப்பலையும் போராளிகளையும் அழிக்க வேண்டும் என்பதில் கடற்படை உறுதியாக இருந்து அதனை செய்து முடித்துவிட்டது. இந்த நிலையில் எமது மக்கள் மிகவும் கோபமடைந்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் எமது பிரச்சினைகளும் எமது முல்லை மாவட்ட மக்களும் யுத்த சூழலில் எமது செயற்பாடுகளையும் யுத்தநிறுத்தம் ஏற்பட்ட பின்னர் நாம் எவ்வாறு ஒடுக்கப்பட்டுள்ளோம் என்பதனையும் மிகவும் தெளிவாக கண்காணிப்புக்குழுவினருக்கு வெளிப்படுத்தியுள்ளோம். அவர்கள் எமது கருத்துக்களைக் கேட்டு அவற்றின் நியாயத் தன்மைகளை புரிந்து தாம் அதனை கவனத்திற் கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள் வதாக உறுதியளித்துள்ளனர் எனவும் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார். (லோ)

### கொழும்பு...

நின்றவேளை பயணிகளிடம் அதிகாரிகளால் கடவுச்சீட்டுக்கள் பரிசீலனை செய்யப்பட்டபோது யுவதியின் கடவுசசீட்டுப் போலி என இனங்கண்டு இருவரையும் மீண்டும் கட்டுநாயக்காவிற்குத் திருப்பியனுப்பினர். இவர் இருவரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கிய போது சிறிலங்காவின் குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு நீதிமன்றில் ஆயர் செய்யப்பட்டனர். நீதிபதி இருவரையும் விசாரித்தபின் யுவதியை விடுதலை செய்ததோடு மாநாகர சபை உறுப்பினரை தடுப்புக் காவலில வைக்குமாறு உத்தரவிட்டார்.

### புலிகளின்...

கடற்பயணத்தை மேற்கொண்டனர்.

இந்நிகழ்வுகள் நிறைவு பெற்றதும் கருத்துத் தெரிவித்த கண்காணிப்புக் குழுத்தலைவர் தாம் மிகவும் மகிழ்வாக இருப்பதாகவும் இத்தகைய செயல்கள் மிகவும் மகிழ்வளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். இதனையடுத்து கண்காணிப்புக் குழுத்தலைவர் நேற்று மாலை வவுனியாவிற்கு தரைமார்க்கமாகச் சென்றார்.

## சிறையிலிருந்த தமிழ் பெண்மீது பொலிசார் பாலியல் வல்லுறவு

(கொழும்பு)

கண்டி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நந்தினிஜெராட் என்ற பெண்ணை சிறிலங்காப் பொலி சார் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2002ஆம்ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி இப்பெண் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இவர் மீது சர்வதேச மன்னிப்புச் சபை இவர் தொடர்பான வழக்கு வேண்டுமென்றே தாமதப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இருவர் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மேலும் இருவர் திருகோணமலை மேல் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கந்தளாயைச் சேர்ந்த பூபாலரெட்ணம் அருள்ரமேஷ், சோமசுந்தரம் சிவா அல்லது சோதிநாதன் ஆகியோரே விடுதலை செய்யப் பட்டவர்கள் ஆவர்.

### ஆனந்த சங்கரியின்...

யின் சமாதான முயற்சிகளுக்குப் பெரும் குந்தகம் விளையும் என்பதனால் சுற்றி வளைப்புத் தேடுதலை உடனடியாக நிறுத்த வேண்டும்.

மேலும் படையினரின் முகாம்கள் தற்போது நிலைகொண்டிருக்கும் இடங்களிலிருந்து முன்னைய இடத்துக்கு மாற்றும் படி கேட்கப்படுமானால் முன்னைய ஆனையிறவு இராணுவ முகாம் அமைந்திருந்த பிரதேசத்தை எமக்குத் திருப்பித் தரும்படி கேட்பதற்கு அரச படைகளுக்கு உரித்து ஏற்படும் என்ற ஆனந்த சங்கரியின் கூற்றிற்கும் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அரசாங்கத்தால் செய்ய முடியாத ஒன்றைச் செய்யுமாறு வற்புறுத்துவது எந்தவகையிலும் நியாயமானதல்ல. இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஆனந்த சங்கரியால் கூறப்பட்ட கூற்று தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தையும் திகைப்பையும் ஏற்படுத்தியுள்ளது. பல நூற்றாண்டுகளாக தங்களுக்குச் சொந்தமானதும் தங்களுக்கு ஜீவனோபாயத்தைத் தேடித்தந்ததுமான தமது கலாச்சார பொருளாதார சமூக நலன்களைப் பேணியதுமான பிரதேசங்களில் மீளக் குடியமர்வதற்கு தமிழ் மக்களுக்குரிய நியாயமான அபிலாசைகளை ஒரு தனிப்பட்ட நபர் என்ற வகையில் ஆனந்த சங்கரி புரிந்துகொள்ளவில்லை என்பதைத் தான் அவரது மேற்கண்ட கூற்றுக்கள் வெளிப்படுத்துகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கமும் வடக்கு கிழக்கில் ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பு அமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டார்கள்.

இன்றைய அரச தலைமைத்துவம் 2001ஆம் ஆண்டு மார்கழியில் ஏற்பட்ட பொதுத் தேர்தலுக்கு முன்பாகவும், அத்தேர்தலில் மக்கள் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலும் வடக்கு கிழக்கில் ஒரு இடைக்கால நிர்வா கம் அமைக்கப்படும் என்று வாக்கு றுதி அளித்திருந்தனர். இந்த நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் இடைக்கால நிர்வாகம் அமைக்கப் படாமல் இருப்பதை நியாயப்படுத்துவது எவ்வகையிலும் நியாயமானதல்ல.

தமிழர் பிரச்சினை தொடர்பாக ஆனந்தசங்கரி தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாகப் பேசுவதற்குத் தகுதியுடையவரா என்ற கேள்வியை மேற்படி சம்பவம் எழுப்பியுள்ளது.

ஒரு தனிப்பட்ட மனிதரின் இவ்வாறான பேச்சுக்கள் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் பாதிப்பதை தமிழர் விடுதலைக் கூட்டணியினால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (25)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.